விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 054 வள்ளுவர் ஆண்டு 2056 தை 29 செவ்வாய்க்கிழமை (11.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# தையிட்டியில் இன்று மாபெரும் போராட்டம்



## பல்வேறு தரப்புகள் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைந்துள்ள விகாரையைச் சூழவுள்ள காணியை மீளக் கையளிக்குமாறு கோரி இன்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினர் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனையில் நேற்றிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானார்.

உந்துருளியில் பிரவேசித்த 2 பேர் 15

## தருமபுரத்தில் கசிப்புடன் நால்வர் கைது


(கிளிநொச்சி)

தருமபுரத்தில் கசிப்புடன் நான்கு சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் நெத்தரையாற்றுப் பகுதியில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட பொலிஸார் கசிப்பு 15

## மக்களின் தீர்மானமே எமது அரசின் தீர்மானம்

### தையிட்டி விவகாரம் தொடர்பில் அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை விடயத்தில் மக்களின் விருப்பத்துக்கு அமைவாக எமது அரசாங்கத்தின் தீர்மானம் இருக்கும் என்று தெரி 15

## தையிட்டி விகாரையை அகற்ற முடியாது

### புத்தசாசன அமைச்சர் சுனில் செனெவி



(கொழும்பு)

தையிட்டியில் அமைந்துள்ள விகாரையை அந்த இடத்திலிருந்து அகற்ற முடியாது என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்கலாநிதி ஹினிதும சுனில் செனெவி தெரிவித்துள் 15

## தையிட்டி திஸ்ஸ விகாரை மீது தமிழர்கள் எவரும் கைவைக்க இடமளிக்க மாட்டோம் - உதய கம்மன்பில



(கொழும்பு)

"யாழ்.தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ரஜமகா விகாரை மீது தமிழர்கள்எவரும்கைவைக்க இடமளிக்கமாட்டோம்" என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அத்துடன்தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரையை இடிக்க 02

## நாடளாவிய ரீதியில் இன்று மின்வெட்டு

(கொழும்பு)

நாடளாவியரீதியில் இன்று மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

எனவே இன்றும் ஒன்றரை மணி நேரம் மின் விநியோகத்தைத் துண்டிக்க நேரிடும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

அதன்படி, இந்த மின் விநியோகத் துண்டிப்பு பிற்பகல் 3.30 மணி முதல் இரவு 9.30 15

## குளவிக்கொட்டு வவுனியாவில் 9 பேர் காயம்

(வவுனியா)

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் குளவி கொட்டியதில் 9 பேர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 15

## தமிழ்த் தேசியக் கட்சிகள் பொதுவான குறிக்கோளை முன்வைக்க வேண்டும்

### விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு பொதுவான அரசியல் குறிக்கோளை முன்வைக்க வேண்டும் என வட மாகாண சபையின்முன்னாள் 02

## உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் அறிவிக்க வெள்ளி விசேட பாராளுமன்ற அமர்வு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் விசேட அறிவிப்பை வெளியிட எதிர்வரும் வெள்ளிக்கிழமை விசேட பாராளுமன்ற அமர்வு நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் 15 ஆம் திகதி பிரதமர் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை பிரதமர் ஹரிணி அமரசூரிய யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

சுழிபுரம், சண்டிலிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களில் இடம்பெறும் மாபெரும் மக்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளார். (ம-7)

# கொக்குவில் இராமகிருஷ்ணா இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி மைதிலி ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருச்செல்வம் ஆயவன், சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீமுருகதாஸ் காந்தன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு நிலைக் கணக்காளர் சி.குகநேந்திரன், ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.சிவராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-7)

# நல்லூர் தென் திசை நுழைவாயில் இன்று திறப்பு



நல்லூர்க் கந்த சுவாமி கோயிலின் தென்திசையில் நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அண்மையாக அமைக்கப்பட்ட நுழைவாயில் வளைவு தைப்பூசமாகிய இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்

மலர்வு 13 - 12 - 1948



உதிர்வு 08 - 02 - 2025

## இராஜகோபால் யோகாம்பாள்

யாழ்ப்பாணம் ஆறுகால்மடத்தைப் பிறப்பிடமாகவும் வற்றாப்பளையை வதிவிடமாகவும் கொண்ட இராஜகோபால் யோகாம்பாள் அவர்கள் 08.02.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மனோன்மணியன் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற செல்லப்பா - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற இராஜகோபாலன் அவர்களின் அன்பு மனைவியும் ரேணுகாதேவி, ரதீஸ்குமார்(சுவிஸ்), கௌசலாதேவி, கோகிலாதேவி, மேனகாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சந்திரமோகன்(மோகன் வெற்றிலை வாணிப உரிமையாளர்), நிர்மலராணி(சுவிஸ்), சுரேஸ்குமார், சிவகுமார்(அருணோதய பல்பொருள் வாணிப உரிமையாளர்), புஸ்பராஜ்(முன்னாள் கஜேந்திரா பான்சி கௌவுஸ் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், கந்தசாமி,பரமேஸ்வரி மற்றும் சரஸ்வதி, சரோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சின்னத்துரை, சரஸ்வதி, பரமலிங்கம் மற்றும் மகேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் தீசன், தர்மிக்கா, சியாந்தன், பிறைற்றன் (சுவிஸ்), பிறின்சன்(சுவிஸ்), சுரோமி(லண்டன்), லோஜிதன் (பொது சுகாதார பரிசோதகர்), கதீசனா(யாழ். பல்கலைக்கழக மாணவி), கஜிந்தன்(வித்தியானந்தா கல்லூரி மாணவன்), கபில்(லண்டன்), கபின்ஷா(வித்தியானந்தா கல்லூரி பழைய மாணவி), கஜேந்தி(வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவி), நவநீதன், நிறஞ்சன்(லண்டன்), பிரியங்கா, அமிர்தினி(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சர்விந், ரஸ்மிதன், கபிஸ்னா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 11.02.2025 செவ்வாய்க் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் பி.ப 2.00 மணியளவில் வற்றாப்பளை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
(C-2243) பேரப்பிள்ளைகள் , பூட்டப்பிள்ளைகள்

## பொதுவான...

முதலமைச்சர், சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கானது இலங்கையின் ஒரு அம்சமாகத் தொடர்ந்து இருப்பதே அதன் பாதுகாப்புக்கும் வருங்கால வாழ்க்கைக்கும் உசிதமானது எனத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்களை உள்ளடக்கி சி.வி விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

தற்போது எல்லோரதும் குறிக்கோள் முழுமையான அதிகாரப் பகிர்வு வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதேயாகும்.

அதற்கு மேல் வெளிப்படையாக நாம் சிந்திக்கத் தலைப்பட்டால் சட்டத்துடன் போராட வேண்டிவரும். ஏற்கனவே சட்டத்துடன் போராடி ஆயுதங்கள் மௌனித்திருக்கும் நிலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அந்த அடிப்படையில் புதியதொரு கூட்டமைப்பை சகல தமிழ்த் தேசியக் கட்சிகளையும் உள்ளடக்கி உருவாக்குவது கடினமில்லை. ஆனால் அதில் உள்ள சிக்கல் என்னவென்றால் இதுவரை காலமும் பல தமிழ்த் தேசியக் கட்சிகளை வழிநடத்தி வரும் தலைமைத்துவங்கள் மக்களின் சந்தேகத்திற்கும் வெறுப்புக்கும் ஆளாகியுள்ளார்கள்.

அவர்கள் மக்களுக்குப் போராடுவதாகக் கூறி தமது சுயநலத்துக்காகவே அரசியல் செய்து வந்துள்ளார்கள் என்று மக்கள் நம்புகின்றார்கள். கடைசியாக நடந்த தேர்தல்கள் தமிழ் மக்களின் இந்த மனோநிலையை பிரதிபலிக்கின்றது.

ஆகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுபவமுள்ள படித்த பண்புள்ள சுயநலமற்ற பிரதிநிதிகளை ஒரு புதிய கூட்டமைப்பில் இடம்பெற வழிவகுக்க வேண்டும் என்றார். (ம-7)


## தமிழர்கள்...

வேண்டும் என்று கூச்சலிடும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்த விடயங்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ ரஜமகா விகாரை சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமானது என்றும்,

அது அமைந்துள்ள காணியும் தற்போது விகாரை நிர்வாகத்துக்கே உரித்தானது என்றும் தெரிவித்த அவர், இந்த விவகாரம் தொடர்பில் கதைப்பதற்குத் தமிழ் மக்களுக்கும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் எந்த அருகதையும் கிடையாது என்றும் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி **கவிதா ஜெயக்குமார்** அவர்களின் பாசமிகு தந்தையார்

## சிவக்கொழுந்து நாகராஜா (சந்திரன்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (3389)

நலன்புரிக் கழகம்
யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை ⟷ நாகபட்டினம்

## கப்பல் சேவை நாளை முதல் ஆரம்பம்

(சென்னை)

**காங்கேசன்துறை - நாகபட்டினத்துக்கும் இடையிலான கப்பல் சேவை நாளை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாகக் கப்பல் சேவையில் ஈடுபடும் சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுச்சாமி தெரிவித்துள்ளார்.**

நாளை காலை 7.30 மணி அளவில் நாகப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பலானது காங்கேசன் துறையை வந்தடைந்த பின்னர் மீண்டும் பி.ப 1.30 மணி அளவில் காங்கேசன் துறையில் இருந்து பயணத்தை ஆரம்பித்து நாகபட்டினத்தை சென்றடையும்

பல்வேறு காரணங்களால் இடைநிறுத்தப்பட்டிருந்த கப்பல் சேவையானது மீண்டும் தனது சேவையை ஆரம்பிக்க உள்ளதோடு வாரத்தில் ஆறு நாட்கள் குறித்த சேவை



இடம்பெற உள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் செவ்வாய்க் கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் கப்பல் சேவை இடம்பெற உள்ளமையினால் போக்குவரத்துக்கான ரிக்கெட்களை www.sailsubham.com என்ற இணையதளத்தின் மூலமாக அல்லது 021 222 4647, 011 764 2117 என்ற இலக்கங்களினூடாகவும் முற்பதிவு செய்து கொள்ளுமாறும் குறித்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (6-8)

# குருநாகலில் நால்வரின்

## உயிரைப்பறித்த கோரவிபத்து

### 28 பேர் காயம்



(குருநாகல்)

குருநாகல், தோரயாய பகுதியில் இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் நான்கு பேர் உயிரிழந்ததுடன் 28 பேர் காயமடைந்துள்ளனர்.

கதுறுவெலவில் இருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த பேருந்தொன்று தோரயாய பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த வேளையில் மாதுறு ஓயாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்தொன்று குறித்த பேருந்தின்மீது மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டது. இந்த சம்பவத்தில் காயமடைந்த 28 பேர் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேருந்து அதிவேகமாக இயக்கப்பட்டதன் காரணத்தினாலே குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக மூத்த பொலிஸ் அத்தியட்சகரும், ஊடகப் பேச்சாளருமான புத்திக மனதுங்க தெரிவித்தார். (6-8)

# அரசியலினை தூய்மைப்படுத்த

## திருத்தங்கள் அவசியம் - நளிந்த



(கொழும்பு)

அரசியல் தூய்மையை உறுதி செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தங்கள் அவசியம் எனவும், அதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கிளீன் ஸ்ரீலங்கா தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் களுத்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் தூய்மைப்படுத்தல் நடவடிக்கையினையும் நாம் முன்னெடுத்து வருகின்றோம். அதில் அரசியலில் காணப்படும் சில கழிவுகளை வெளிப்படுத்த வேண்டும். ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் கிரமமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், அரசியல் தூய்மையை உறுதி செய்வதற்குச் சட்ட நடவடிக்கைகள் அவசியமாயின் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (6-8)

# சீன உயர்மட்டக் குழு

## இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

சீன தேசிய இன விவகார ஆணையத்திற்குப் பொறுப்பான அமைச்சர் தலைமையிலான உயர்மட்ட சீனக் குழு எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை இலங்கைக்கு வருகை தர உள்ளது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அமைச்சரவையின் முக்கிய உறுப்பினரான பான் யூ, சீனாவின் சிறுபான்மை விவகாரங்களைக் கையாளும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

ஒரு வார கால உத்தியோகபூர்வ விஜயத்தில் சீன அமைச்சர் நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகம் மற்றும் புத்தசாசனம், மத மற்றும் கலாசார விவகார அமைச்சகத்தின் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்

அமைச்சர் பான் தனது பயணத்தின் போது கண்டிக்கும் செல்ல உள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இன நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பான விடயங்களில் தூதுக்குழுவின் தலைவரான அமைச்சர் பான் யூ இலங்கை சகாக்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றனர். (6-8)

# நான்கு அமைச்சர்களுக்கு

## பதில் அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

2025 உலக அரசாங்க உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு விஜயம் செய்வதற்காக நாட்டிலிருந்து புறப்பட்டதை அடுத்து, 4 அமைச்சுக்களுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டிஜிற்றல் பொருளாதாரத்திற்கான பதில் அமைச்சர் - டிஜிற்றல் பொருளாதாரத்திற்கான பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, பதில் பாதுகாப்பு அமைச்சர் - பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருணஜெயசேகர, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பதில் அமைச்சர் - தொழிலாளர் அமைச்சர் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான பிரதி அமைச்சர் டாக்டர் அனில் ஜயந்த பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளனர். (6-8)



கண்ணீர் அஞ்சலி


எமது பாடசாலை ஆசிரியை திருமதி. மரினா ஜெரால்ட் திலகேந்திரா அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர். இம்மானுவேல் அன்ரனி துரைரெட்ணம்

அவர்கள் 08.02.2025 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/கலைகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(C-2239)



கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 22 01 1947 இறப்பு 09 02 2025

எமது வித்தியாலயத்தின் ஆசிரியர் திருமதி. பிரேமளா தமிழ்ச்செல்வன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர். திருமதி. சிவசோதியம்மா இராசரத்தினம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம், யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்

(C-2238)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கொற்றாவத்தை றேஞ்சஸ் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி



ஆட்ட நாயகன் கிருசிகன்

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுமதியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் நெறிப்படுத்தலுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் தமது 60 ஆவது ஆண்டு வைரவிழாவினை முன்னிட்டு நடத்தும் அணிக்கு 9 நபர் கொண்ட திக்கம் வெற்றிக் கிண்ணம் மின்னொளியிலான கால்பந்தாட்ட தொடரில், கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சூப்பர் 10 போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென்அன்ரனீஸ் அணி மோதியது .

முதல் பாதியாட்டத்தில் 10 ஆவது நிமிடத்தில் றேஞ்சஸ் அணி வீரர் ஆர்த்திகன் முதலாவது கோலைப் பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து மேலும் உற்சாகம் அடைந்த றேஞ்சஸ் அணி வீரர் கிருசிகன் 14ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் றேஞ்சஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் பலமான முறையில் மோதிய போதிலும் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை.

இதனால் ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது.போட்டியின் ஆட்டநாயகனாக றேஞ்சஸ் அணியின் முன்கள வீரர் கிருசிகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (6-8-90)

## யாழ்.பல்கலை அணி 72 ஓட்டங்களால் வெற்றி


சிறந்த வீரராக செரோபன்

கொக்குவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ணம்-2025 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட தொடரில் பிரிவு II இல் யாழ். பல்கலைக்கழக அணி, யாழ்.ஜொனியன்ஸ் அணியை 72 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 30 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. செறோபன்- 77, இடமல்கொட- 46, தயூஸ்ரன்- 28 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் யாழ்.ஜொனியன்ஸ் அணி சார்பாக கஜகரன் 21 ஓட்டங்களுக்கு 3, கிஸாந்துஜன் 34 ஓட்டங்களுக்கு 2, சண்சஜன் 41 ஓட்டங்களுக்கு 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். ஜொனியன்ஸ் அணி 27.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சண்சஜன்-60, கிஸாந்துஜன்-19, விதூஸன்-15 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர்.

பந்து வீச்சில் யாழ்.பல்கலைக் கழக அணி சார்பாக சிறிமேனகன்- 24 ஓட்டங்களை கொடுத்து 6, டெஸ்வின் 16 ஓட்டங்களுக்கு 1, தர்ஸன் 34 ஓட்டங்களுக்கு 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக யாழ்.பல்கலைக்கழக அணியைச் சார்ந்த செறோபன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இத் தொடரில் 6 கழக அணிகள் பங்குபற்றுகின்றன. பிரிவு I இல் பற்றீசியன், ஜொலிஸ்ரார், கிருஸ் கொப்பர்ஸ் அணிகளும் பிரிவு II இல் யாழ்.ஜொனியன்ஸ் அணியும் யாழ். பல்கலைகழக அணியும் கே.சீ.சீ.சீ அணியும் இடம்பெற்றுள்ளனர்.

6 போட்டிகள் வீக் முறையில் நடைபெற உள்ளன. பிளே ஒப்ஸ் சுற்றில் மூன்று போட்டிகள் நடைபெறவுள்ளதைத் தொடர்ந்து இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. (6-8)

## இங்கிலாந்திற்கு எதிரான ஒருநாள் தொடரை கைப்பற்றிய இந்திய அணி

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் ரோகித் சர்மாவின் அதிரடி துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்திற்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி தற்போது 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகின்றது. இந்த தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் கட்டாக்கில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. இந்நிலையில் இங்கிலாந்து அணி 49.5 ஓவர்களில் 304 ஓட்டங்களை பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக Joe Root அதிகபட்சமாக 69 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார்.

இந்திய அணி தரப்பில் பந்து வீச்சில் ஜடேஜா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தனது அறிமுக ஒருநாள் போட்டியில் களமிறங்கிய வருண் சக்கரவர்த்தி 1 விக்கெட் வீழ்த்தியிருந்தார். 305 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி ஆரம்பம் முதல் ரோகித் மற்றும் கில் ஆகியோர் அதிரடியாக துடுப்பெடுத்தாடியிருந்தனர்.

இறுதியில் ரோகித் சர்மா அதிரடியாக விளையாடி 76 பந்துகளில் சதமடித்திருந்ததுடன் 119 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்திய அணி 44.3 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 308 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 2-0 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## தேசியமட்ட கால்பந்தாட்டம் சம்பியனான மகாஜனக்கல்லூரி



இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய 14 வயதுப் பெண்கள் அணிகளுக்கிடையிலான தேசியமட்டக் கால்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

14 வயதிற்கு உட்பட்ட தேசிய மட்ட கால்பந்தாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு றேஸ் கோர்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி முதல் 5ஆவது நிமிடத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீராங்கனை சோபிகா முதலாவது கோலைப் பதிவு செய்தார். ஆனால் சற்றும் சளைக்காமல் போராடிய குருநாகல் மலியதேவ மகளிர் கல்லூரி அணி 10ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் பதிவு செய்து கோலின் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தியது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் சம பலத்துடன் மோதினர். இதனால் இரு அணிகளாலும் மேலதிக கோல்களைப் பதிவு செய்யமுடியவில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர் விவகாரம்
# இந்திய பாராளுமன்றில் பிரேரணை முன்வைப்பு

(டில்லி)


14 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தமை தொடர்பில் விவாதிப்பதற்காக இந்தியத் தேசிய காங்கிரஸ் பாராளு மன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் நேற்றைய தினம் இந்திய பாராளுமன்றில் ஒத்தி வைப்பு வேளை பிரேரணையொன்றை முன்வைத்தார்.

இந்தப் பிரேரணையை முன் வைத்து உரையாற்றிய அவர், கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை உடனடியாக விடுவிப்பதற்கும், அவர்களின் படகுகளைத் திருப்பி அனுப்புவதற்கும் இலங்கைக்கு இந்திய அர சாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் கோரினார்.

அத்துடன், சர்ச்சைக்குரிய கடற்பகுதிகளில் செயற்படும் இந்திய மீனவர்கள் தொடர்பான கண்காணிப்பு அதிகரிக்கப்பட வேண்டும் எனவும், நீண்டகால தீர்வு காண பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் இந்தியத் தேசிய காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் வலியுறுத்தியுள்ளார். (6-8)

## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 02 . 07 . 1946



இறைவன் அடியில் 23 . 02 . 2024

அமரர். சுப்பையா பார்வதி

(திதி-11.02.2025)

கனவிலும்
நினைக்கவில்லையடி
நீ எங்களை
விட்டுச் செல்வாய் என்று
ஒரு வருடகாலம் ஆகிவிட்டது
உன் குரல் கேட்காதோ
எம் மனம் ஏங்குகிறது
தாயே!!!

(816)

இல.101 மில் வீதி,
உக்குளாங்குளம்,
வவுனியா.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு | தோற்றம் |
|---|---|---|
| 02.02.1958 | 11.02.2023 | 11.04.1962 |

அமரர்.நாகலிங்கம் செல்வதயாளரூபன்

அமரர்.செல்வதயாளரூபன் நாகராணி

ஆலமரங்களிரண்டு
அடியோடு சாய்ந்து
ஆண்டு இரண்டாகிவிட்டது
ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும்
மாண்டோர் வருவதில்லை
எம் மனதை விட்டு நீங்குவதுமில்லை
எம் மனதில் நிலைத்திருப்பீர்கள்
அன்பின் அடையாளமாக

இல 52 , 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 967 2409
075 967 2409

(823)

## இராசிபலன்

11.02.2025
தை 20, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 7.57 மணிவரை

பூசம் முன்னிரவு 7.33 மணிவரை
சுபநேரம் -11.04-12.34 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

வளவன்

**மேஷம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**ரிஷபம்** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள்.

**மிதுனம்** பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், புதிய நட்புகள் இடம்பெறலாம்.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகளை எளிதில் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் சிறு தடை தாமதங்கள் என்பன ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் அவசியம்.

**மகரம்** சொந்த பந்தங்களின் வருகையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், உற்சாகமான நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மீனம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள்.

செய்த வினையை அழிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நெற்புதிர் எடுக்கும் நிகழ்வு





(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நெற்புதிர் எடுக்கும் (அறுவடை) நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை இடம் பெற்றது.

தைப்பூச தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் 'புதிர் தினம்' எனும் இந்த பாரம்பரிய நிகழ்வில் கோயில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்குச் சொந்தமான மறவன்புலவில் உள்ள வயலுக்குச் சென்று அந்த வயலில் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நெற்புதிர் எடுக்கும் (அறுவடை) நிகழ்வு இடம்பெற்றது.

இவ்வழிபாட்டு முறை நல்லூர் கந்தசுவாமி கோயிலின் மரபுசார் பண்பாட்டு விழாவாகப் பேணப்பட்டு வருகிறதுடன் இப்புதிர் விழா 291 ஆவது ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

## சட்டவிரோத மதுபானம்; பெண்ணொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமான முறையில் சாராய விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். புறநகர் பகுதியில் வீடொன்றில் பெண்ணொருவர் சாராய விற்பனையில் ஈடுபடுவதாகப் பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத் தகவலின் அடைப்படையில் குறித்த வீட்டிற்கு விரைந்த பொலிஸார் பெண்ணைக் கைது செய்ததுடன் அவரிடம் இருந்து கால் போத்தல் சாராயப் போத்தல்களையும் மீட்டுள்ளனர்.

விசாரணைகளில் குறித்த பெண் மதுபானசாலைகள் மூடப்பட்டுள்ள நேரங்களில் சாராயப் போத்தல்களை அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக தெரிய வந்துள்ளது.

குறித்த பெண்ணை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (6-33)






கனிஸ்ரா




சதீஸ்




நிதுசன்




சயந்தன்




சறோ




மீனா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிக்க

## மத்திய வங்கி விசேட நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய வங்கியானது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிப்பதற்கான மூன்றாவது பரஸ்பர மதிப்பீட்டிற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது.

இந்த மதிப்பீடு ஆசிய பசுபிக் குழுமத்தால் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதோடு, இது தொடர்பான செயற்பாடுகள் விரைவில் தொடங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவிருக்கும் இப் பரஸ்பர மதிப்பீட்டில், 40 பரிந்துரைகளுடன் நிதியியல் நடவடிக்கை செயலணியின் தொழில்நுட்ப இணங்குவித்தலும், 11 உடனடி பெறுபேறுகளுடன் அவற்றின் செயற்திறன் நடைமுறைப்படுத்தலையும் எடுத்துக்காட்ட வேண்டப்பட்டுள்ளது.

அத்துடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழிப்பதற்கான கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளை சீரமைக்க, அமைச்சரவை பல்துறைப் பங்குதாரர் நிறுவனங்களுடன் சேர்ந்து செயற்றிறன் வாய்ந்த நடைமுறைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

### ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 77 ஆவது ஊடகத் திறன் பயிற்சிப் பட்டறை



ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 77 ஆவது ஊடகத் திறன் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை, தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் அவர்களின் தலைமையில் கொழும்பு - 10, அல் ஹிதாயா கல்லூரியில் M.C. பஹார்தீன் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

கொழும்பு - 10 அல் ஹிதாயா கல்லூரி, கொழும்பு -09 கைரிய்யா முஸ்லிம் மகளிர் கல்லூரி, கொழும்பு -12 அல்ஹிக்மா கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் செயற்குழு உறுப்பினர் கலாபூஷணம் பரீட் இக்பால், கௌரவ அதிதி லங்கா அக்ரோ நிறுவனத்தின் தலைவர் அல்ஹாஜ் M.C. பஹார்தீன் அவர்களுக்கு பொன்னாடை அணிவிப்பதையும் அருகில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன், செயலாளர் ஸாதிக் ஸிஹான் ஆகியோரையும் படத்தில் காணலாம் (த-2237)


### கரைச்சி பிரதேச சபை-கிளிநொச்சி
### படவரைஞர்களை பதிவு செய்தல்-2025

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைய விரும்பும் படவரைஞர்கள் (புதிதாக பதிவு செய்ய விரும்புவர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துக்கொள்ள விரும்புவர்கள்) பதிவினை மேற்கொள்வதற்கான இறுதித்திகதி 28.02.2025 ஆகும். மேலும் கீழ்வரும் விடயங்களை கருத்தில்கொண்டு உரிய ஆவணங்களுடன் 28.02.2025 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் பி.ப 3 மணிவரை உப அலுவலகம் கிளிநொச்சி மற்றும் உப அலுவலகம் முரசுமோட்டை ஆகிய அலுவலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

- NVQ -Level 5 in Drafting Technology (Building) கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள் மற்றும் NVQ -Level 4 in Drafting Technology (Building) கற்கை நெறியினை பூர்த்திசெய்துள்ளதுடன் தற்போது NVQ -Level 5 in Drafting Technology (Building) கற்கை நெறியினை தொடர்ந்து கற்பவர்கள் உரிய சான்றிதழ்களை சமர்ப்பித்து பட வரைஞருக்கான பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- 28.02.2025 இற்கு முன்னர் பதிவுகளை புதுப்பிக்கத்தவறும் படவரைஞர்கள் தாமத கட்டணமாக ரூபா 1000.00 இனை செலுத்திக்கொள்ளுதல் வேண்டும்.
- கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சியில் பதிவு செய்யத்தவறின் அல்லது புதுப்பிக்கத்தவறின் எந்தவொரு படவரைஞரும் எமது பிரதேச சபையில் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக தொழிற்பட முடியாது.

செயலாளர்,
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி. (சி-2241)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 0<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBM, Sales Excecutive<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15118 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>2 இல் செவ்<br>கி.பா: 34 1/2<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Nurse<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15126 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, pvt<br>எதிர்பார்ப்பு : தகுதியான பெண்<br>தொ.இ: B/15119 | பிறப்பு : 1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>3 இல் சூரி செவ்<br>கி.பா: 41<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்- BA, Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15127 |
| பிறப்பு:1988 RC<br>நட்சத்திரம் : திருவோணம்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: degree, German<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15120 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 02<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: NDT, Teacher<br>எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15128 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# மணிவிழா வாழ்த்து

திரு.தியடோர் ஜெராட் செல்வரட்ணம் செல்வச்சந்திரன்

(பயிற்றப்பட்ட சுகாதாரமும் உடற்கல்வியும் ஆசிரியர், பகுதித் தலைவர்)




சேவை விபரம்

- மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி (1990 பங்குனி - 1990 மார்கழி)
- மன்/பரப்பாங்கண்டல் றோ.க.வி (1991 தை-1991 ஐப்பசி)
- மன்/ கருங்கண்டல் ம.வி (1991 கார்த்திகை-1992 புரட்டாதி)
- மன் பெரிய பண்டிவிரிச்சான் அ.த.க.பா (1992 ஐப்பசி-1993 மாசி)
- மன்/மோட்டக்கடை அ.த.க.பா (1993 பங்குனி-1994 சித்திரை)
- மன்/கீரிசுட்டான் அ.த.க.பா (1994 வைகாசி-1995 சித்திரை)
- யா/நாவாந்துறை றோ.க.வி (1995 வைகாசி- 1996 சித்திரை)
- கிளி/பனிக்கன்குளம் அ.த.க.பா (1996 வைகாசி-1997-மார்கழி)
- மு/புதுக்குடியிருப்பு றோ.க.வி (1998 தை-2000 மார்கழி)
- மு/ கைவேலி கணேச வித்தியாலயம் (2001 தை-2012 மாசி)
- யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி (2012 பங்குனி- 2012 சித்திரை)
- கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (2012 வைகாசி- 2014 வைகாசி)
- யா/ மல்லாகம் மகாவித்தியாலயம் (2014 வைகாசி-2025 மாசி)


எமது பாடசாலையின் பகுதித் தலைவராகவும் பயிற்றப்பட்ட சுகாதாரமும் உடற்கல்வி ஆசிரியராகவும் பணியாற்றி 11.02.2025 இன்று ஓய்வு பெறும் திரு. தியடோர் ஜெராட் செல்வரட்ணம் செல்வச்சந்திரன் அவர்களுக்கு இனிய மணி விழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வு காலம் சிறப்பாக அமையவும் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்-
ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# நமீபியாவின் முதல் ஜனாதிபதி சாம் நியோமா காலமானார்



(விண்ட்ஹொக்)

"நமீபியாவின் நிறுவனத் தந்தை" எனப் போற்றப்படும் சாம் நியோமா 95 ஆவது வயதில் கடந்த சனிக்கிழமை காலமானார்.

ஆபிரிக்க தேசமான நமீபியா தென்னாபிரிக்காவின் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை அடைந்து, சுதந்திர நாடாக வித்திட்ட சுதந்திரப் போராட்டத் தலைவர், சாம் நியோமா.

நமீபியாவின் மக்களால் அந்நாட்டின் முதல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமைக்குரியவராவார்.

வயது முதிர்வால் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த சாம் நியோமா உயிரிழந்திருக்கும் செய்தி நமீபிய மக்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந் நிலையில், சாம் நியோமா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து அந்நாட்டின் தற்போதைய ஜனாதிபதி நங்கோலா மம்பா வெளியிட்டுள்ள பதிவில், "தாம் மிகவும் நேசித்த இந்த நாட்டுக்கும் இங்குள்ள மக்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டு சேவையாற்றிய நம் தேசத் தந்தை, நெடுநாள் வாழ்ந்து மறைந்துவிட்டார்" எனக் குறிப்பிட்டுள்ளார். (6-8)

# பங்களாதேஷில்

# கட்டுப்படுத்த கூ

## வன்முறையில் ஈடுபட்



காசிபூர் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து வன்முறை வெடித்தது.

அமைதியின்மை நாடு முழுவதும் வேகமாகப் பரவியது. கும்பல் அவாமி லீக்கின் சின்னங்களை குறிவைத்து, அரசியல் பிரிவுகளுக்கு இடையே பதற்றங்களை மேலும் அதிகரித்தது.

இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கூட்டுப் படைகளில் இராணுவ வீரர்கள், பொலிஸ் மற்றும் சிறப்புப்

# அடையாளம் தெரியாமல் உருமாறிய இஸ்ரேலிய பணயக் கைதிகள்



(ஜெருசலேம்)

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி தெற்கு இஸ்ரேல் பகுதியில் நோவா இசைக் கச்சேரி நடைபெற்றது. அப்போது, திடீரென அந்தப் பகுதிகளில் நுழைந்த ஹமாஸ் தீவிரவாதிகள் 100 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

இந்த நிலையில், இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, இரு தரப்பினிருந்தும் பணயக் கைதிகள் படிப்படியாக விடுவிக்கபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக, சிறைப்பிடிக்கப்பட்டு 500 நாட்களுக்குப் பிறகு எல் சாராபி, ஓர் லெவி மற்றும் ஒகத் பென் அமி என்ற மூன்று இஸ்ரேலிய பணயக் கைதிகளை ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த சனிக்கிழமை இஸ்ரேலிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

ஊட்டச்சத்துக் குறைபாடு காரணமாக அவர்களின் உடல்நிலை மிகவும் மோசமாகக் காணப்பட்டது. எலும்பும், தோலுமாக உருமாறிப் போன அவர்களை கண்டு உறவினர்கள் கடும் அதிர்ச்சியும், கோபமும் அடைந்தனர்.

இந் நிலையில், இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறுகையில், "ஹமாஸ் தீவிரவாதிகள் அரக்கர்கள் என்பது மீண்டும் ஒருமுறை நிரூபனமாகியுள்ளது.

இஸ்ரேனியர்களின் உடல் நலிவுக்கு காரணமான ஹமாஸ் குழுவை முற்றிலும் அழிக்க உறுதியேற்க வேண்டும்" என தெரிவித்துள்ளார். (6-8)

# பயங்கரவாதிகள் நடத்திய


## தங்கச்சுரங்க தொழிலாளர்கள்

(பமாகோ)

மாலியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் தங்கச் சுரங்க தொழிலாளர்கள் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்நாட்டில் ஐ.எஸ். ஐ.எஸ், அல் கொய்தா ஆதரவு பயங்கரவாதக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்தப் பயங்கரவாத குழுக்கள் பொது மக்களைக் குறிவைத்து தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

இந்நிலையில், அந்நாட்டின் வடக்கு பகுதியில் கோவா நகரில் தங்கச் சுரங்கம் உள்ளது. இந்த




சுரங்கத்திற்கு நேற்று முன்தினம் தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு வாகனாங்கள் சென்று கொண்டிருந்தன. அவர்களுக்கு பாதுகாப்பாக இராணுவ வீரர்களும் சென்றனர்.

அப்போது, அந்த வாகனங்களை குறி வைத்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் வன்முறையை
# ட்டு நடவடிக்கை
## பட்ட 1300 பேர் கைது

**(டாக்கா)**

**பங்களாதேஷ் பாதுகாப்புப் படையினர் நாடு தழுவிய கூட்டுப் படை நடவடிக்கையின் கீழ் 1,300 நபர்களை கைது செய்துள்ளனர்.**

பிரிவுகள் முன்னெடுத்த கூட்டுப்படை நடவடிக்கையின் கீழ் கடந்த நான்கு நாட்களாக தேசத்தைப் பற்றிக் கொண்ட அமைதியின்மை மற்றும் வன்முறை தொடர்பாக 1,300 பேரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந் நிலையில் முஹம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு கடந்த வெள்ளிக்கிழமை இரவு காசிபூர் மாவட்டத்தில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய பின்னர் கடந்த சனிக்கிழமையன்று "ஆபரேஷன் டெவில் ஹன்ட்' எனப் பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு இருந்தது.

அதிகரித்து வரும் அமைதியின்மைக்கு பதிலளிக்கும் விதமாக, 'ஆபரேஷன் டெவில் ஹன்ட்' செயற்படுத்துவதை கண்காணிக்கவும் மேற்பார்வையிடவும் ஒரு கட்டளைமையம் நிறுவப்பட்டுள்ளது.

அத்துடன் சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிக்க கூடுதல் முயற்சிகளுடன், நடவடிக்கை முழு வீச்சில் இருப்பதாக தலைமை ஆலோசகர் அலுவலகம் இதன்போது உறுதிப்படுத்தியது. (6-8)

## திய தாக்குதலில்
## ர்கள் 32 பேர் பலி





இந்தத் தாக்குதலில் தங்கச் சுரங்க தொழிலாளர்கள் 32 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலை தொடர்ந்து இராணுவ வீரர்களும் பதிலடி தாக்குதல் நடத்தினர். இதில் பயங்கரவாதிகளும் உயிரிழந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. (6-8)

## இஸ்ரேலியப் படையினரால் கொடுமைக்குள்ளான பாலஸ்தீனியர்
## வைரலாகும் காணொளி

(ஜெருசலேம்)


இஸ்ரேலியப் படைகளால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட பாலஸ்தீனிய பணயக் கைதி ஒருவர் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் காணப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. விடுவிக்கப்பட்டதன் பின்னர் அவர் பேசும் ஒரு காணொளிப் பதிவு தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி வருகிறது.



இந்த நபரின் முகம் மற்றும் உடல் ஆகியவை ஊட்டச்சத்து பற்றாக்குறைக்கான அடையாளத்துடன் காணப்படுகின்றன.

45 நாட்களாகக் கண்களைக் கட்டி, கைவிலங்கு பூட்டி, முழங்கால் போடும்படி இஸ்ரேலியப் படைகள் கட்டாயப்படுத்தியதாகவும் சிறையிலிருந்து விடுவிக்கும் முன்பு மின்சாரம் பாய்ச்சியும், நாய்களை ஏவி விட்டும் கொடுமைகளைச் செய்ததாகவும் குறித்த காணொளியில் அந் நபர் தெரிவித்துள்ளார். (6-8)

## பராமரித்த முதியவரைக் காண
## மருத்துவமனை சென்ற யானை



(வோஷிங்டன்)

இன்றைய கால கட்டத்தில் பாசம், அன்பு என்பது வெறும் சொல்லாகவே உள்ளதாக பெரும்பாலானோர் உணர்கின்றனர்.

ஒருவர் காட்டும் பாசத்தை புறந்தள்ளும் சம்பவங்களே இன்றைய சமூகத்தில் அதிகமாக நடைபெறுவதாக பலர் வேதனையில் உள்ளனர்.

ஆறறிவு மனிதர்கள் தான் இப்படி. ஐந்தறிவு உள்ள விலங்குகள் அப்படி இல்லை என்று சமூக வலைத்தளங்களில் வெளியாகும் பல வீடியோக்கள் உணர்த்தியுள்ளன.

அப்படி தற்போது பகிரப்படும் வீடியோ தான் பார்ப்பவர்களை உணர்ச்சியில் கண்ணீர் சிந்த வைத்துள்ளது. 27 விநாடிகளே ஓடும் ஒரு வீடியோவில் யானை ஒன்று மருத்துவமனை வாசலில் நிற்கிறது.

பிறகு, அறையின் உயரம் குறைவாக உள்ளதை உணர்ந்த யானையானது மெதுவாக குனிந்து அடிமேல் அடி வைத்து ஊர்ந்து தன்னை வளர்த்த முதியவரிடம் சென்று அதன் தும்பிக்கையை நீட்டி அவர் மீது போர்த்தியிருக்கும் துணியை விலக்குகிறது.

அதன் பின் அங்கு இருக்கும் பெண் ஒருவர் யானையின் தும்பிக்கையை தூக்கி முதியவரின் கையோடு இணைக்கிறார்.

இச்சம்பவத்தை அங்கிருந்தவர்கள் படம் பிடித்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டனர்.

இந்த மனதை தொடும் வீடியோ பகிரப்பட்ட சில மணி நேரத்திலேயே 60 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களால் லைக் செய்யப்பட்டது.


மேலும் பலர் இந்த வீடியோவை பகிர்ந்து வருகின்றனர்.

"இது அன்பின் தூய்மையான வடிவம். விலங்குகள் தங்களைப் பராமரித்தவர்களை ஒருபோதும் மறக்காது" என்றும் மற்றொருவர் "அன்புக்கு எல்லைகள் இல்லை என்பதற்கு இந்த வீடியோ சான்றாகும்.

இதுதான் மிகவும் அழகான, மனதைத் தொடும் காட்சி" என்றும் வீடியோவைப் பார்த்த பயனர்கள் பலரும் கருத்து பதிவிட்டு வருகின்றனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிகிரியாவுக்கு கிடைத்த உலக அங்கீகாரம்



(கொழும்பு)

2025 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் வரவேற்கத்தக்க நகரமாக இலங்கையின் சிகிரியா தரப்படுத்தப் பட்டுள்ளது.

இந்த அங்கீகாரம் 360 மில்லியனுக்கும் அதிகமான சரிபார்க்கப்பட்ட வாடிக்கையாளர் மதிப்புரைகளை அடிப்படையாகக் கொண்டது.

இது சிகிரியாவைச் சூழவுள்ள விருந் தோம்பல் மற்றும் கவர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. இலங்கையின் கலாசார முக்கோணத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள சிகிரியா, இயற்கையின் சிறப்பையும் ஆழ மான வரலாற்றையும் இணைக்கும் ஒரு கட்டாயச் சுற்றுலா இட்மாகும்.

யுனெஸ்கோவின் உலகப் பாரம் பரிய தளமான சிகிரியாப் பாறைக் கோட்டை, மூச்சடைக்கக்கூடிய காட்சிகளை வழங்குகிறது மற்றும் பண்டைய இலங்கையின் கட்டடக் கலை பிரகாசத்தை எடுத்துக்காட்டு கிறது.

கோட்டைக்கு ஏறுவது முதல் கிராம வாழ்க்கையின் அமைதியைத் தழுவுவது வரை, சிகிரியா சாகச மற்றும் அமைதியின் மறக்க முடியாத கலவையை வழங்குவதாக booking.com சுட்டிக்காட்டியுள்ளது.

டிராவலர் ரிவியூ (சுற்றுலா பயணிகளின் கருத்து) விருதுகளின் பதின்மூன்றாவது பதிப்பின் ஒரு பகுதியாக, Booking.com 2025 ஆம் ஆண்டிற்கான பூமியில் மிகவும் வரவேற்கத்தக்க 10 நகரங்களை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (6)

## சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 900 | 900 | 700-1100 | 800 |
| உருளைக்கிழங்கு | 180 | 170 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 1400 | 1400 | 1100-1200 | 1200 |
| தக்காளி | 200 | 200 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 250-350 | 200 |
| கோவா | 350 | 250 | 250 | 400 |
| கரட் | 450 | 600 | 600 | 800 |
| பூசணி | 120 | 150 | 90-100 | 200 |
| புடோல் | 200 | 200 | 200-220 | 400 |
| வாழைக்காய் | 250 | 160 | 120-170 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 500 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 180 | -- | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 500-600 | 600 |
| வெண்டைக்காய் | 300 | 500 | 300-350 | 600 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 150 | 250 |
| பயற்றங்காய் | 800 | 800 | 1000-1200 | 1000 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 600 |
| பீற்றூட் | 300 | 400 | 400 | 400 |
| கறிமிளகாய் | 1000 | 900 | 800-1100 | 1000 |
| முருங்கைக்காய் | -- | 1500 | 1500 | 2400 |
| போஞ்சி | 400 | 400 | 400-450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 750 | 500 | 600-650 | 750 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 70-100 | 200 |
| தேசிக்காய் | 300 | 250 | 200-300 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 200-250 | 150-230 | 200-260 |
| இராசவள்ளி | 600 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 180 | 230 | 80-150 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 130 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 50 | 80 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 200 |

## இன்று ஒரு தகவல் 320



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மனம்

மனது இருக்கிறதே அதற்கு உதாரணமாக எதை சொல்லுவார்கள் தெரியுமா? குரங்கைத்தான் சொல்லுவார்கள். குரங்கு மரத்திலே ஒரே இடத்திலா உட்கார்ந்து இருக்கிறது? ஒவ்வொரு கிளையாகத் தாவித்தாவி போய்க்கொண்டே இருக்கும்.

அதனால் தான் மனம் ஒரு குரங்கு என்று சொல்லுவார்கள். இந்த மனதை கன்னாபின்னா என்று அலையவிடாமல் அதை ஒரு நிலைப்படுத்து என்று பெரியவர்கள் சொல்லுவார்கள். அவர்களுக்கு என்ன சுலபமாகச் சொல்லிவிடுகிறார்கள். அவஸ்தை நமக்குதான் புரியும். நம் மனது வெறுமனே அலைவதோடு இருந்தால் அது எங்கே அலைந்து கொண்டிருக்கு என்று தேடிக் கண்டுபிடித்து அதை கட்டுப்படுத்தலாம்.

சில சமயம் அது அலைகின்ற போது அப்படியே காணாமல் போய்விடும். எங்கேயிருக்கிறது என்று கண்டுபிடிக்கிறதே பெரும்பாடாக இருக்கிறது. அப்புறம் எங்கே அதைக் கட்டுப்படுத்துவது? அதுவாக மனது வைத்து திரும்பி வந்தால் தான் உண்டு.

மனதை ஒரு நிலைப்படுத்துவது மிகவும் கஸ்டம் என்று பலபேர் நினைக்கிறோம். அது எல்லோராலும் முடியும் காரியம் தான்.

வேண்டும் என்றால் ஒரு பரிசோதனை செய்து பாருங்கள் என்றார் ஒரு பெரியவர். (சமீபத்தில் சித்தியடைந்த ஸ்ரீ அபிரவ வித்யாதீர்த்த மகா சுவாமிகள்) வேறு ஒன்றுமில்லை ஒரு சாதாரண நபரிடம் நிறைய சில்லறைக் காசுகளைக் கொடுத்து எவ்வளவு இருக்கிறது என்று எண்ணச் சொல்லுங்கள். பத்துக் காசு, ஐந்து காசு இப்படி இருக்கட்டுமே அவன் எவ்வளவு தான் எண்ணினாலும் நடுவிலே எண்ணிக்கையை தவற விட்டு விட்டு முழிப்பான். மறுபடியும் முதலிலிருந்து ஆரம்பிப்பான்.அதே நபரிடம் நூறு ரூபாய் காசைக் கொஞ்சம் கொடுத்து எண்ணச் சொல்லுங்கள். இப்போது அந்த நபர் கொஞ்சம் நிதானமாக, கவனமாக எண்ண ஆரம்பிப்பான். இது ஏன்? ஒரு நோட்டை விட்டுட்டாலும் நூறு ரூபாயாக போய்விட்டது. முதலில் அப்படி இல்லை. 5 காசு போனாலும் பத்துகாசு போனாலும் அது பெரிதாக மனதுக்கு தோன்றவில்லை. இந்த உலகத்திலே எதுவும் பெரிதில்லை. இதைவிட பெரிதாக உள்ளது ஒன்று இருக்கிறது. அதற்கு விலை மதிப்பில்லை என்ற எண்ணம் வந்துவிட்டால் மனதை ஒரு நிலைப்படுத்துவது கஸ்டமாக இருக்காது என்கிறார் அந்த பெரியவர். மனதை நிலைப் படுத்தினால் வெற்றி கிட்டத்தட்ட நெருங்கி வந்துவிடும் என்று அர்த்தம். துரியோதனன், அர்ஜுனன் இவர்கள் இரண்டு பேருக்குமே குரு துரோணர் தான். இவர்கள் இரண்டு பேருக்கும் அவர் வில்வித்தையைக் கற்றுக் கொடுத்தார்.

கற்றுக் கொடுத்ததைப் பொறுத்தவரைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. இரண்டு பேருக்குமே ஒரே மாதிரித்தான் சொல்லிக்கொடுத்தார். ஆனால் அர்ஜுனன் தான் கெட்டிக்காரனாக வந்தான். ஏன்?

அங்கே தான் இருக்கு விடயம். ஒரு நாள் துரியோதனன், அர்ஜுனன் இவர்கள் இரண்டு பேருக்கும் ஒரு பரீட்சை வைத்தார் துரோணர். எந்த அளவுக்கு இவர்கள் கற்று இருக்கிறார்கள் என்று பார்ப்பதற்காக ?

இரண்டு பேரையும் காட்டிலே அழைத்துக்கொண்டு போனார். ஒரு இடத்திலே நிறுத்தினார்.

முதலில் துரியோதனனைக் கூப்பிட்டார். அதோ தெரிகிறது பார் ஒரு மரம். அந்த மரத்திலே வலது பக்கத்திலே நீளமாக இருக்கும் ஒரு கிளை மேலே ஒரு புறா உட்கார்ந்திருந்தது. அந்த புறாவின் வலது கண்ணுக்கு சரியாக நீ குறி வைக்க வேண்டும். எங்கே செய் பார்க்கலாம் என்றார். துரியோதனன் அதே மாதிரி செய்தான். இப்போது உனக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார் துரோணர். அவன் அதற்கு மரம் தெரிகிறது. அந்த மரத்தின் கிளை தெரிகிறது. அதன் மேலே உட்கார்ந்திருக்கும் புறா தெரிகிறது. அந்த புறாவின் தலை தெரிகிறது. கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் நீங்கள் குறி வைக்கச் சொன்ன அந்த வலது கண்ணும் தெரிகிறது என்றான்.

சரி நீ போகலாம் என்றார். அடுத்தபடியாக அர்ஜுனனைக் கூப்பிட்டார். அதே மாதிரி குறி வைக்கச் சொன்னார். அவனும் அதே மாதிரி செய்தான். இப்போது உனக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார் துரோணர். புறாவின் வலது கண்ணைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியவில்லை என்றான் அர்ஜுனன். அர்ஜுனனுக்கு நிகராக துரியோதனன் வரவே முடியாது என்பதை அப்போதே முடிவு செய்து விட்டார் துரோணர். அதனாலே மனம் எந்தளவுக்கு ஒரு நிலைப்படுகின்றதோ அதுதான் வெற்றிக்கு இரகசியம்.

இந்தக் காலத்து இளைஞன் ஒருத்தன் ஒரு துப்பாக்கியோடு ஒரு வாத்தியாரைத் தேடி வந்தான். சேர்! எனக்கு துப்பாக்கி சுடுவதற்கு கற்றுக் கொடுங்கள் என்றான். எப்படி இந்தத் துப்பாக்கி உனக்கு கிடைத்தது? என்று பயந்து போய் கேட்டார் வாத்தியார். என் அப்பா வைத்திருந்தார். அவருக்கு தெரியாமல் எடுத்து வந்திருக்கிறேன். என் அப்பா திரும்பி வீட்டுக்கு வர முதல் கொண்டு போய் இருந்த இடத்திலேயே வைத்துவிடுவேன் என்று மிகவும் நம்பிக்கையோடு சொன்னான்.

சரி என்று சொல்லிவிட்டு இந்த வாத்தியாரும் துரோணர் மாதிரியே ஒரு மரத்தை காட்டி அதிலே உட்கார்ந்திருக்கும் ஒரு காகத்தின் கண்ணுக்கு குறி வைக்கச் சொன்னார். இவனும் குறி வைத்தான். இப்போது உனக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார். இவனுக்கு கை கால் லேசாக உதற ஆரம்பித்து விட்டது. சேர்! என் அப்பாவோட முகம்தான் சேர் அங்கே தெரிகிறது என்றான். அங்கே மட்டுமில்லைப்பா உனக்கு பின்னாடி கூட அப்பாவே உன்னை தேடிக்கொண்டு இங்கே வந்துவிட்டார் என்றார் வாத்தியார்.

# மன்னார் மாவட்ட பொங்கல் விழா



(மன்னார்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் வேட்டையா முறிப்பு அருள்மிகு ஆதி விநாயகர் ஆலயம் இணைந்து ஏற்பாடு செய்த மாவட்ட பொங்கல் விழா நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வேட்டையா முறிப்பு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மாவட்ட இந்து சமய கலாசார உத்தியோகத்தர் அ.தனுஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

காலை 9.30 மணியளவில் பொங்கல் பண்பாட்டு பேரணி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மங்கல வாத்திய இசையுடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

சம்பிரதாய முறையில் 108 பானைகளில் பொங்கல் பொங்கி நடன நிகழ்வும் பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், நானாட்டான் பிரதேச செயலாளர் கே.சிவசம்பு, மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (நி-8-285)



# தையிட்டி விகாரைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு

## செல்வம் எம்.பி

(தருமங்காடு)

யாழ் தையிட்டி விகாரை உடைக்கப்பட வேண்டியதுடன், அதற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டத்திற்கு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி முழுமையான ஆதரவு வழங்கும் என்று அந்த கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

அதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், தையிட்டி விகா ரைக்கு எதிராக இடம்பெறும் போராட்டத்திற்கு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழுமையான ஆதரவை தெரிவிக்கும். அது உண்மையில் உடைக்கப்பட வேண்டிய விடயம்.

வடகிழக்கில் பிக்குகள் மற்றும் சில திணைக்களங்கள் நினைத்ததை செய்யும் ஒரு நிலை காணப்படுகின்றது. எனவே இந்த விகாரை உடைக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்கான ஆதரவை நாங்கள் வழங்குவோம். மக்களுடைய விருப்பமும் அதுவே என தெரிவித்தார். (6-250)

# மரக்கடத்தல் முறியடிப்பு வாகனத்துடன் சாரதி கைது

## 11 தேக்கு மரக்குற்றிகள் மீட்பு

(நெளுக்குளம்)

கூழாமுறிப்பு வி காட்டுப் பகுதியில் கடத்துவதற்கு தயாராக இருந்த 11 தேக்குமரக்குற்றி களைக் கைப்பற்றியதோடு, வாகனச் சாரதி ஒருவரையும் ஒட்டுசுட்டான் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு வி காட்டுப் பகுதியில் மரக்கடத்தல் இடம்பெறவுள்ளதாக ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பெரும் குற் றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரி.சுபேசனுக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து அவர் தலைமையிலான குழுவினர் நேற்று அதிகாலை புதுக்குடியிருப்பு நோக்கி கொண்டு செல்லத் தயாராக இருந்த நிலையில் 11 தேக்கு மரக்குற்றிகளை மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 29 வயதுடைய வசந்தபுரம் மன்னாகண்டலை சேர்ந்த சாரதி ஒருவர் கப்ரக வாகனத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர். (6-8-299)

# 15 இந்திய மீனவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி - இரணைதீவிற்கு அண்மித்த கடற்பகுதியில் கடந்த 26 ஆம் திகதி கைதான 15 இந்திய மீனவர்களுக்குக் கிளிநொச்சி நீதஜவான் நீதிமன்றினால் தலா ஐம்பதாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இழுவைப் படகை செலுத்தியவருக்கு இருபது மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இரணைதீவை அண்மித்த கடற்பகுதியில் மூன்று படகுகளுடன் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 34 இந்திய மீனவர்களில் இரண்டு படகுகளுடன் தொடர்புபட்ட 19 மீனவர்களுக்குக் கடந்த 5 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் தண்டனை விதிக்கப்பட்டது.

அதேநேரம் ஏனைய 15 பேர் பயணித்த மற்றைய படகின் பதிவு இலக்கம் வேறுபட்டுக் காணப்பட்டதனால் குறித்த வழக்கு நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்தநிலையில், குறித்த பதினைந்து பேரும் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட நிலையில் இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (6-315)


# சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்
## பெறுகைகளுக்கான அழைப்பு
## ஆதார சித்த வைத்தியசாலை வவுனியாவுக்கான உலர் உணவு விநியோகம் 2025

1. வட மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான, தகைமை வாய்ந்த உலர் உணவு விநியோகஸ்தர்களிடமிருந்து பின்வரும் வைத்தியசாலைக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | வைத்தியசாலை | உத்தரவாத வைப்புப்பணம் | |
|---|---|---|---|---|
| | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01. | NP/22/02/FM09/RF/SBH Vav/2025 | ஆதார சித்த வைத்தியசாலை. வவுனியா | 60,000.00 | 26.05.2025 |

2. விலைக்கேள்விதாரர்கள் உலர் உணவு விநியோகத்திற்கேற்ற வகையிலான வியாபாரப் பதிவினையுடையவராக இருத்தல் வேண்டும், மேலும் குறித்த நிறுவனமானது வடமாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட கிளையினை கொண்டிருத்தல் வேண்டும்.
3. வழங்குநர்கள் பிரிவு 2 (Bidding Data) அமைய குறைந்தபட்ச தகைமையேனும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid documents' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து தனியாக மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 3000/= காசாகச் செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **13.02.2025** தொடக்கம் **27.02.2025** வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.
5. விலைக்கேள்வித்தாரர்களிற்கான முன் பெறுகைக் கூட்டம் (Pre Bid Meeting) ஆனது **20.02.2025** ஆம் திகதி காலை 11.00 மணிக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் நடைபெறும்.
6. "சேவையின் விபரம் ..........., பெறுகை இல..........." போன்ற விபரம் கடித உறையின் மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத, விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.
7. விலைக்கேள்விகள் **28.02.2025** திகதி 10.30 மணிக்கு முன்பதாக இத்திணைக்களத்தின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.
8. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் அலுவலக நாட்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது (021-222-0824) என்னும் தொலைபேசியூடாக பெற்றுக்கொள்ளலாம்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**Dr.திரு.தி.சர்வானந்தன்,**
**தலைவர், மாகாண திணைக்கள பெறுகைகள் குழு**
**வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம்,**
**இல 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி : 021-222-0824**
**email:accountantpdim@gmail.com**

**தொலைநகல் : 021-222-0822**

(சி-2240)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 699



அது மட்டும் நிஜம் தானடி வானதி! இளவரசன் கடலில் குதித்ததை நேரில் பார்த்தவர் வந்து சொன்னாரே! அதை நம்பாமல் என்ன செய்வது?"

"வானர்குல வீரரைத் தானே சொல்கிறீர்கள்? அவரே இளவரசரைப்பற்றி வேறு ஏதும் சொல்லவில்லையா? ஓடக்காரப் பெண்ணைப் பற்றியும் நாகைப் பட்டினம் சூடாமணி விஹாரத்தைப் பற்றியும் ஏதும் சொல்லவில்லையா?"

"இதெல்லாம் உன் சொப்பனமாயிருக்க வேண்டும். ஆம், ஓடக்காரி பூங்குழலியைப் பற்றியும், நாகைப் பட்டினம் சூடாமணி விஹாரத்தைப் பற்றியும் நீ தூக்கத்தில் பிதற்றினாய்! புத்த பிக்குணி ஆகப் போவதாகக் கூட உளறினாய்! அதற்குள் உனக்கு என்னடி இந்த உலக வாழ்க்கையின் மீது அவ்வளவு வெறுப்பு? எதற்காக நீ புத்த பிக்குணி ஆகவேண்டும்?"

"அக்கா! என் மனது உங்களுக்குத் தெரியாதா? அவரைக் கடல் கொண்டு விட்டது என்று கேட்ட பிறகு, எனக்கு இந்த உலகில் என்ன வாழ்வு வைத்திருக்கிறது! சொப்பனத்தில் கண்ட படியே யானை என்னைத் துதிக்கையால் தூக்கி எறிந்து கொன்றிருக்கக்கூடாதா என்று தோன்றுகிறது!"

"அடி பாவி! நீயும் போய் விட்டால் என் கதி என்னடி ஆகிறது?" "உங்கள் விடயம் வேறு, அக்கா! நீங்கள்"

"ஆமாம், ஆமாம்! அருள்மொழியிடம் என்னைக் காட்டிலும் உனக்கு அதிக ஆசை! இல்லையா?"

"அக்கா! அப்படி ஒன்றும் நான் சொல்லவில்லை. தங்களைப் போல் நான் மனோ தைரியம் உள்ளவள் அல்ல. அவர் இறந்து விட்ட பிறகு."

"சீச்சீ! என்ன வார்த்தை சொல்லுகிறாய்? அவன் இறந்தான் என்று ஏன் சொல்ல வேண்டும்? உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா? பழுவேட்டரையர்களும், பழுவூர் ராணியும், பேதை மதுராந்தகனும் அப்படிச் சொல்லிக் கொம்மாளம் அடிப்பார்கள். நீயும், நானும், அப்படி ஏன் சொல்ல வேண்டும்? அல்லது ஏன் நினைக்கத்தான் வேண்டும்?"

"பின்னே, என்ன சொல்கிறீர்கள்? அவர் சுழிக் காற்றில் கடலிலே குதித்தபிறகு வேறு என்ன ஆகியிருக்க முடியும்? பிழைத்திருந்தால் இத்தனை நாள் வந்திருக்க மாட்டாரா?"

"அடி பைத்தியமே! கடலில் குதித்தால், அவனைக் கடல் கொண்டு விட்டது என்று அர்த்தமா?"

"கரை ஏறியிருந்தால் இத்தனை நாள் தெரியாமலா இருக்கும்?"

"என் தகப்பனாரின் கதை உனக்கு தெரியுமா? அவர் இளம்பிராயத்தில் பல மாத காலம் இருக்குமிடமே தெரியாமலிருந்தது. தேடிப்பிடித்துக் கொண்டு வந்து இளவரசுப் பட்டம் கட்டினார்கள். என் பாட்டனார் அரிஞ்சய சோழர் தக்கோலம் யுத்தத்திற்குப் பிறகு அடியோடு மறைந்து விட்டார். பல வருஷங்களுக்குப் பிறகு தான் அவர் இருக்குமிடம் தெரிந்தது. நான் சொல்லுகிறேன் கேள், வானதி! காவேரித் தாய் ஒரு சமயம் என் தம்பியைக் காப்பாற்றிக் கரை சேர்த்தாள். அது மாதிரியே சமுத்திர ராஜனும் பொன்னியின் செல்வனைக் கரை சேர்த்திருப்பார். நமது கடற்கரைக்கும் இலங்கைத் தீவுக்கும் மத்தியில் எத்தனையோ சிறிய சிறிய தீவுகள் இருக்கின்றன. அத் தீவுகளில் ஒன்றில் அருள்மொழி ஒதுங்கியிருக்கக் கூடும் அல்லவா? அவனைத் தேடும் வேலையை நன்றாகச் செய்யும்படி தூண்டுவதற்காகவே நான் இந்தப் பிரயாணம் புறப்பட்டேன், உன்னையும் அழைத்துக் கொண்டு, உனக்கு இதெல்லாம் ஞாபகமே இல்லை போலிருக்கிறது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பணிவு வேண்டும்



சந்தையில் ஆட்டின் தலையை சிறந்த விலைக்கு ஒருவர் வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

புலித் தலையை வீட்டில் மாட்டி வைக்கலாம் என்று எண்ணி ஒருவர் வாங்கிக் கொண்டு சென்று விட்டார்.

அந்தச் சந்தையில் மனிதத் தலையை மட்டும் வாங்க ஒருவருமே முன்வரவில்லை.

அமைச்சர் அரசரிடம் திரும்பி வந்து, "மாமன்னரே, ஆட்டுத் தலையையும் புலித் தலையையும் மக்கள் வாங்கி சென்று விட்டனர். ஆனால் மனிதத் தலையை மட்டும் எவருமே விலை கொடுத்து வாங்க முன் வரவில்லை" என்றார்.

அதற்கு அரசர் அமைச்சரை பார்த்து, அமைச்சரே மனிதத் தலையை இலவசமாகவே கொடுத்து விடுங்கள் என்றார்.

"சரி", என்று சொல்லிவிட்டு சென்றார் அமைச்சர். மனிதத் தலையை இலவசமாகக் கொடுக்க முன் வந்தும் யாரும் அத்தனை வாங்க முன் வரவில்லை.

மறுபடியும் அமைச்சர் மன்னரைச் சந்தித்தார்.

இப்பொழுது அசோகர் அமைச்சரைப் பார்த்து, "அமைச்சரே, பேரரசனாக இருக்கும் என் தலைக்கும் இது பொருந்தும். உயிர் இருக்கும் வரையில்தான் இந்த மனிதத் தலைக்கு மதிப்பு. உயிர் போன பிறகு அதன் மதிப்பும் போய்விடுகிறது.

எனவே மதிப்பு இருக்கும் போதே தலையால் பெரியோர்களின் திருவடிகளில் விழுந்து வணங்கி அந்தப் புனிதத்தைப் பெற்றுக் கொள்வது நல்லது. அதுவே பணிவு இந்தப் பணிவு அனைவருக்கும் வேண்டும்" என்றார்.

நீதி : பெரியோர்களிடம் பணிந்து நடக்க வேண்டும். பணிந்து நடப்பவர்களைத் தான் அனைவரும் விரும்புவார்கள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைக்கற்களை உடைப்பதில் நேரத்தை வீண டிக்காது, அதை குதித்துத் தாண்டி முன்னேறிச் செல்லுங்கள். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் புத்திஜீவிகள் அமையம் உருவாக வேண்டும்

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அமையம், பேரவை, சிவில் அமைப்பு, சபை என்ற சொற்ப தங்கள் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போனவை.

அந்தள்வுக்கு குறித்த சொற்பதங்களோடு கூடிய அமைப்புகள் தோன்றி மறைந்து போயின.

என்ன செய்வது, எங்களின் அரசியல் தரப்புகள் எங்களுக்குப் பொருத்தமில்லாமல் அமைந்து போக, துன்பத்தைக் கட்டிச் சுமப்பதே எங்களின் தலைவிதியாயிற்று.

உண்மை. இனி தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் தமிழ் அரசியல் தரப்புகள் இம்மியும் சிந்திக்கப் போவதில்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

மாறாக, வன்மத்தனத்தினூடாக எங்கள் தமிழ் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தி அதனூடு அரசியலை நகர்த்துகின்ற வியூகங்கள் அமைக்கப்படும் சாத்தியங்களே உண்டு.

எனவே நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயங்கள் உட்பட எமது அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிக் கதைப்பதற்கு யாரும் இல்லை என்ற கையறு நிலை ஏற்பட்டுள்ளது.

உதாரணத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியை எடுத்துக் கொண்டால், அவர்கள் உள்ளக முரண்பாட்டால் பிளவடைந்துள்ளனர்.

கூடவே தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மறைவு கட்சி உறுப்பினர்களிடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரின் நடவடிக்கை காரணமாக மாவை சேனாதிராஜா மனஉளைச்சலுக்கு ஆளாகியிருந்தார் என்றும் அதுவே அவரின் மரணத்துக்குக் காரணம் என்றும் பரவலாகப் பேசப்படுகிறது.

இதற்கும் மேலாக, தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இவர்கள் மாவை சேனாதிராஜாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ளக்கூடாது எனப் பகிரங்கப்படுத்துகின்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

இதுபோல ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் போக்குகளும் குறுந்தன்மை கொண்டதாக இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

எனவேதான் தமிழ்ப் புத்திஜீவிகள் அடங்கிய ஓர் அமையத்தை உடனடியாக ஆரம்பித்து, அந்த அமையம் இனப்பிரச்சினைத் தீர்வு உட்பட தமிழர் பிரதேசத்திலுள்ள அத்தனை விடயங்கள் குறித்தும் ஜனாதிபதி அநுர வுடனும் அரசாங்கத்துடனும் பேச்சுவார்த்தை நடத்தி, அவற்றுக்கான தீர்வுகளை விரைந்து பெற்றாக வேண்டும்.

கூடவே குறித்த புத்திஜீவிகள் அமையம்; தமிழ் அரசியல் கட்சிகளுடனும் இதர தமிழ் அமைப்புகளுடனும் கலந்துரையாடல்களை நடத்தலாம்.

அதிலும் குறிப்பாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற மனநிலை கொண்ட சிங்கள சமூகத்துடன் மிகநெருக்கமான கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதும் கட்டாயமானதாகும்.

# மாகாணசபை முறைமையில் தேசிய மக்கள் சக்தி கைவைக்காது

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை முறைமை என்பது தாம் வென்றெடுத்த உரிமை எனத் தமிழர்கள் கருதுவதால் அந்த உரிமையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கைவைக்காது.

இவ்வருட இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் முற்பகுதியில் மாகாண சபைத்தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் எனக் கடற்றொழில் மற்றும் நீரியல்கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

சீனா - இலங்கை நட்புறவின் பயனாக "சீனாவின் சகோதர பாசம்" எனும் வாசகத்துடன் யாழ். மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சீனாவின் உதவியில் உலருணவுப் பொதிகள் வழங்கப்படும் நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலாளர் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பின்னர் அமைச்சர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் வரும் மாகாண சபை முறைமை நீண்டு நிலைக்கக்கூடிய நிரந்தரத் தீர்வு என நாம் நம்பவில்லை. எனினும், மாகாண சபை முறைமையைத் தமக்குக் கிடைத்த உரிமையாகத் தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

எனவேதான் மாகாண சபை முறைமை மீது கைவைக்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாகாண சபை முறைமையை அர்த்தமுள்ள முறைமையாக மாற்றியமைப்போம். இவ்வருடத்துக்குள் அல்லது அடுத்த வருடம் முற்பகுதியில் அதற்கான தேர்தல் நடத்தப்படும்.

சிறுபான்மையின மக்கள் உட்பட நாட்டு மக்களின் உரிமைகளை நிலைநாட்டுகின்ற புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும்.

அதேவேளை, மக்களுடன் கலந்துரையாடி நாட்டில் மீண்டும் இனவாதம், மதவாதம் ஏற்படாத வகையில் தையிட்டி விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றார். (ம-7)

# தேங்காய்க்கு - சம்பல் அரிசிக்கு - வீட்டுப்பிராணி மின்தடைக்கு - குரங்கு காரணம்

## அநுர அரசின் பொறுப்பற்ற பதில்களுக்கு கம்மன்பில கடுங்கண்டனம்

தமது அரசாங்கத்தின் இயலாமையை மறைத்துக்கொள்ள தேங்காய் தட்டுப்பாட்டிற்குத் தேங்காய்ச் சம்பலையும் அரிசித் தட்டுப்பாட்டிற்கு வீட்டுப்பிராணிகளையும் குற்றம் சாட்டிய அநுர அரசாங்கம் மின்விநியோகச் சிக்கலுக்குக் குரங்குகளினைக் குற்றவாளியாக்க முனைவதாக உதய கம்மன்பில அரசாங்கத்தைக் கடுமையாகச் சாடினார்.

நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநுர அரசாங்கம் பதவிக்காலத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த உயிரினங்களையும் குற்றவாளியாக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.

குரங்கினால் தான் மின்விநியோகம் துண்டிக்கப்பட்டது என்று மக்களை மூடர்களாக்கும் வகையில் பேசுவதை மின்சக்தி அமைச்சர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசாங்கத்துக்கும் உயிரினங்களுக்கும் ஏதும் முற்பகை உள்ளதா? எனத் தெரியவில்லை. வீட்டில் வளர்க்கும் பிராணிகளுக்கு உணவளிப்பதால் தான் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

காட்டு விலங்குகளால் தான் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் குறிப்பிடுகிறார்.

வீடுகளில் தேங்காயச் சம்பல் மற்றும் உணவுக்குத் தேங்காய்ப் பால் எடுப்பதால் சந்தையில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகப் பிரதி அமைச்சர் குறிப்பிடுகிறார்.

தமது இயலாமையை மறைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் போலியான காரணிகளை மாத்திரமே குறிப்பிட்டுக் கொள்கிறது.

இந்த அரசாங்கம் பதவிக்காலத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் அனைத்து உயிரினங்களையும் குற்றவாளியாக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது. மின்பிறப்பாக்கியில் குரங்கு மோதியதால் மின்விநியோகம் தடைப்பட்டது என்று மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போது மின்விநியோகக் கட்டமைப்பில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மின்விநியோகத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மின்சாரசபை குறிப்பிட்டுள்ளது. ஆகவே மக்களை மூடர்களாக்கும் வகையில் கருத்துரைப்பதை அமைச்சர் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

# வீடு புகுந்து மோ.சைக்கிள் கைத்தொலைபேசி திருட்டு

## புதுக்குடியிருப்பில் சம்பவம்

புதுக்குடியிருப்பு உடையார் கட்டுப்பகுதியில் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், கைத்தொலைபேசி என்பன களவாடப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் தனது வீட்டு வளவினுள் சாவியுடன் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு உறங்கச் சென்றுள்ளார்.

மறுநாள் காலையில் மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத்தொலைபேசி என்பன களவாடப்பட்டுள்ளமையை, உரிமையாளர் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டிற்கமைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,60)

# இ.போ.ச பேருந்து சாரதியை தாக்கிய மூவர் கைது

(தருமபுரம்)

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு நோக்கிக் கடந்த வெள்ளிக்கிழமை (7) பயணித்த அரச பேருந்து சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய மூன்று சந்தேக நபர்கள் நேற்று (10) தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாள்வெட்டுத் தாக்குதல் புதுக்குடியிருப்புப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளமையால் விசாரணைகளுக்காகப் புதுக்குடியிருப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக புதுக்குடியிருப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,316)

## மன்னார் சூட்டுச் சம்பவம்

# சந்தேக நபர்களது விளக்கமறியல் நீடிப்பு

மன்னார் நீதிமன்றத்திற்கு முன் கடந்த மாதம் 16 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கைது செய்யப்பட்ட 7 பேரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கைதானவர்கள் நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதன்போது கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் பொலிஸ் புலனாய்வுத்துறையினர் முன்னெடுத்து வருவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் - பகுதி – II

18

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய் ஆணைக்குழு.

### 1920-1970களில் கிராமச் சபைகளின் தொழிற்பாடு (கிராமச் சங்கங்கள்)

அன்றைய காலத்தில் ஒரு கிராமச் சங்கம் (கிராமச் சபை) எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதைப் பார்ப்போம். அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட பிரதான தலைமைக்காரனின் பிரிவு (கிராம அலுவலர் பிரிவு) அல்லது உப பிரிவு ஓர் கிராமச் சங்கத்தின் (கிராமச் சபையின்) ஆதிக்கத்தின் கீழ் வர இருக்கிறது என்று பிரகடனம் செய்யும்.

இந்த அறிவிப்பு அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்படும். கிராமச் சங்க நிர்வாகத்தின் கீழ் வரவிருக்கும் பகுதி அவ் அறிவிப்பில் குறிப்பிடப்படும். பின்னர் இப் பகுதி வட்டாரங்களாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு தலைமைக்காரன் பிரிவும் (அல்லது பகுதி) ஒரு வட்டாரமாகக் கருதப்படும். ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரகடனம் வெளிவந்த மூன்று மாதகாலத்தின் பின் ஒவ்வொரு வட்டாரத்து வாக்காளரும் தம் பிரதிநிதியைத் தெரிவுசெய்யும் திகதியை நிர்ணயிக்கும் அறிவிப்பு ஒன்று வெளியிடப்படும். இந்த அறிவிப்பு தேர்தல் திகதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் இதற்கென நியமிக்கப்பட்ட தேர்தல் அதிகாரியால் வெளியிடப்படும்.

பிரதிநிதிகளாகப் போட்டியிட விரும்புவோர் தங்களது வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரத்தை தேர்தல் அதிகாரி அறிவிப்பார். வேட்பாளர்களின் பெயர், நியமனம் முறையான வேட்புமனுக்கள் மூலமாகவே செய்யப்பட வேண்டும்.

ஒவ்வோர் நியமனப் பத்திரத்திலும் அபேட்சகர் தாம் பிரதிநிதியாக வருதற்குச் சம்மதம்தான் என்பதைக் குறித்து ஒப்பமிடுதல் வேண்டும். அத்துடன் வாக்குரிமையுள்ள ஒருவர் அவர் பெயரைப் பிரேரிக்கவும் இன்னொருவர் அனுமதிக்கவும் வேண்டும்.

நியமனப் பத்திரங்களைத் தேர்தல் அதிகாரியிடமோ அவரால் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்கரும உத்தியோகத்தரிடமோ ஒப்புவிக்கமுன் அரசாங்கத்திடம் ரூபா 10 பிணைப்பணம் இறுத்தல் வேண்டும். இவ்வாறு அவர் போட்டியிடத் தகுதிபெறுவார்.

மேலே காட்டியவாறு நியமனப் பத்திரங்களை ஓர் அபேட்சகர் சமர்ப்பிக்குமிடத்து, அவருடைய நியமனத்தை ஆட்சேபிப்பதற்கும் இடம் வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஓர் அபேட்சகருக்கு வேண்டிய தகைமைகள் இல்லையென ஒருவர் ஆட்சேபிக்கலாம்.

இப்படியான ஆட்சேபனைகளைத் தேர்தல் அதிகாரி விசாரணை செய்து அவை சரிதான் எனக் காணுமிடத்து குறித்த நியமனத்தை நிராகரித்து விடுவார். ஆட்சேபனைகள் சரியற்றவை எனக் காணுமிடத்து நியமனத்தை ஏற்றுக்கொள்வர்.

ஒரு வட்டாரத்திற்கு ஒரே ஒரு நபர் மட்டுமே வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தால் தேர்தல் அதிகாரி அந்த நபரை உடனடியாக வெற்றி பெற்றவராக அறிவிப்பார் எந்தவித வாக்கெடுப்பும் தேவையில்லை அந்த நபர் தானாகவே அந்த வட்டாரத்தின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக கருதப்படுவார். ஒரு வட்டாரத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் வேட்புமனு தாக்கல் செய்திருந்தால், தேர்தல் அதிகாரி முறையான தேர்தலை நடத்த வேண்டும்.

இப்படியான தேர்தல் எங்கே, எப்போது நடைபெறும் என்பதனை தேர்தல் அதிகாரி நிர்ணயிப்பார். இதற்கென வாக்களிக்கும் நிலையத்தில் தேர்தல் அதிகாரியோ அவரின் அதிகாரம் பெற்ற இன்னோர் உத்தியோகத்தரோ தலைமை வகிப்பார். இரகசிய முறையிலேயே வாக்களிப்பு நடைபெறும்.

வாக்காளர்கள் தங்கள் விருப்பமான வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள். வாக்கெடுப்பு முடிந்ததும், அவ்விடத்திலேயே அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் எண்ணப்படும். அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார். வெற்றி பெற்றவர் அந்த வட்டாரத்தின் அதிகாரப்பூர்வ பிரதிநிதியாக ஆவார்.

அளிக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கையின் மொத்தத்தில் எட்டில் ஒரு பங்கை ஓர் அபேட்சகர் பெறாவிட்டால் அவர் இறுத்த 10 ரூபாய் பிணைப்பணம் பறிமுதலாக்கப்படும்.

இவ்வாறு பல்வேறு வட்டாரங்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, கிராமச் சங்கத்தின் முதல் கூட்டத்தை நடத்துவதற்கான பொறுப்பு அப்பகுதியின் ஊராட்சி நிலைய உதவிக் கொமிஷனரிடம் உள்ளது. அவர் கூட்டம் நடைபெறுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாகவே, ஒவ்வொரு உறுப்பினருக்கும் எழுத்து வடிவில் அறிவிப்பு அனுப்பி கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பார்.

கூட்டம் தொடங்கியதும் அதன் முதல் பணி ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பதாகும். இதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் குறைந்தபட்சம் பாதிப் பேர் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். கூட்டம் நடைபெற தேவையான குறைந்த பட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஆங்கிலத்தில் "கோரம்" (Quorum) என்கிறோம். தமிழில் இதனை "நிறைவெண்" என அழைக்கிறோம்.

கிராமச் சங்கத் தலைவர் தேர்தல் அனைத்து உறுப்பினர்களும் நேரடியாகப் பங்கேற்கும் வகையில் வெளிப்படையாக நடத்தப்படுவது சிறந்தது. இவ்வாறு நடைபெறும் போது: ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் தகுதியானவர் என கருதும் நபருக்கு வாக்களிக்க முடியும். தேர்தல் செயல்முறை வெளிப்படையாக இருப்பதால் அனைவரும் நேர்மையான முறையில் பங்கேற்க ஊக்குவிக்கப்படுவர்.

சமூகத்தின் ஒட்டுமொத்த விருப்பத்தை பிரதிபலிக்கும் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார். வெளிப்படையான தேர்தல் முறை சமூகத்தில் நம்பிக்கையையும் ஒற்றுமையையும் வளர்க்கும். அனைத்து உறுப்பினர்களும் தேர்தல் செயல்முறையில் நேரடியாக ஈடுபடுவதால், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு அதிக ஆதரவு கிடைக்கும். இந்த அணுகுமுறை ஜனநாயக மதிப்புகளை வலுப்படுத்தி, கிராமச் சங்கத்தின் செயற்றிறனை மேம்படுத்தும்.

கிராமச்சங்கத்தின் முதல் கூட்டத்தில், தலைவர் தேர்வு செய்யப்படும் அதே முறையில் ஒரு உபதலைவரும் தேர்ந்தெடுக்கப்படுவார். ஒவ்வொரு கிராமச்சங்கத்தின் பதவிக் காலமும் மூன்று ஆண்டுகள் ஆகும். இந்த காலகட்டம் நிறைவடைந்ததும் புதிய தேர்தல் நடத்தப்பட்டு, புதிய உறுப்பினர்களைக் கொண்ட ஒரு புதிய சங்கம் உருவாக்கப்படும்.

ஒரு தலைவர் (இடையில் இறக்காவிட்டால் அல்லது பதவியிலிருந்து விலகா விட்டால்) சாதாரணமாக மூன்று ஆண்டு காலத்துக்கு கடமையாற்றுவார். உபதலைவர் ஒவ்வொரு ஆண்டும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இம்முறை பல நன்மைகளைக் கொண்டுள்ளது. ஒரே நபர் மட்டுமல்லாமல் பலருக்கும் உபதலைவர் பதவிக்கான வாய்ப்புக் கிடைக்கிறது.

உபதலைவருக்குரிய நிர்வாகப் பணிகளில் பலர் பயிற்சி பெற இது வழிவகுக்கிறது. பல்வேறு நபர்கள் தலைமைப் பொறுப்பில் பணியாற்றுவதால், அமைப்பின் ஒட்டுமொத்தத் திறன் மேம்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் புதிய உப தலைவர் வருவதால், புதிய யோசனைகளும் அணுகுமுறைகளும் உருவாக வாய்ப்புள்ளது. இந்த முறையானது அமைப்பின் நீண்டகால வளர்ச்சிக்கும் பல்வேறு உறுப்பினர்களின் திறன் மேம்பாட்டிற்கும் உதவுகிறது.

ஒவ்வொரு கிராமமும் தனது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்க ஒரு கிராமச் சபையைக் கொண்டிருந்தது. இந்த கிராமச் சபைக்கு சமூக நன்மைக்கான விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் உருவாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், இந்த விதிகளை நிறைவேற்றும் அதிகாரமும் கிராமச் சபையிடம் இருந்தது. இவ்வாறு, கிராமச் சபை சமூகத்தின் அடிப்படை அமைப்பாக செயற்பட்டது.

கிராமச் சங்கத்தின் நிர்வாக அதிகாரியாக விளங்குபவர் அதன் தலைவரே ஆவார். இவரது முக்கிய பொறுப்பு, கிராமச் சங்கம் ஏற்றுக்கொண்ட திட்டங்களைச் செயற்படுத்துவதாகும். இந்த செயற்பாடுகள் அனைத்தும் சங்கம் வகுத்துள்ள வழிமுறைகளுக்கு இணங்க நடைபெற வேண்டும். அதுமட்டுமின்றி சங்கம் காலத்திற்கேற்ப எடுக்கும் முடிவுகளுக்கு ஏற்ப தமது நிர்வாகப் பணிகளை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். இந்த நிலையில், தலைவர் தன்னை ஒரு உள்ளூர் அதிகாரியாகவோ அல்லது சிறு அளவிலான சர்வாதிகாரியாகவோ கருதி தனது சொந்த விருப்பப்படி செயற்பட முடியாது. மாறாக சங்கத்தின் ஒட்டுமொத்த நலனையும், அதன் முடிவுகளையும் மனதில் கொண்டு செயற்பட வேண்டும்.

கிராமச் சங்கம் நிறுவப்பட்டவுடன் அது சிறப்பு அந்தஸ்து கொண்ட நிர்வாக அமைப்பாக மாறுகிறது. இந்த அமைப்புக்கு பின்வரும் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. தான் நிறுவப்பட்ட பகுதியின் பெயரைத் தாங்கி செயற்படும் உரிமை. சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை. ஒப்பந்தங்களில் ஈடுபடும் உரிமை. பிற அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளும் உரிமை. இவ்வாறு கிராமச் சங்கம் தனது பகுதியின் வளர்ச்சிக்காக சுயாதீனமாக செயற்படும் அதிகாரம் பெறுகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி விசேட...

முடிவைச் சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிப்பதற்காக, வெள்ளிக்கிழமை காலை 9.30க்கு பாராளுமன்றத்தின் விசேட கூட்டத்தைக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாக பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியின் தலைமையில் நேற்றுக் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதன்படி, பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 16 இன் விதிகளின்படி, பிரதமர் சபாநாயகரிடம் விடுத்த கோரிக்கையின் பேரில் இந்த அழைப்பு விடுக்கப்படுகிறது.

அத்துடன், பெப்ரவரி 14ஆம் திகதி இந்தச் சட்டமூலத்தை ஆராய்வதற்காகச் சம்பந்தப்பட்ட அமைச்சு சார் ஆலோசனைக் குழுவைக் கூட்டுவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. (ம-7)



















## தருமபுரத்தில்...

உற்பத்தியில் ஈடுபட்ட நால்வரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 45 போத்தல் கசிப்பு, 233 போத்தல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன. (ம-7,316)

## தையிட்டி...

ளார்.

அத்துடன், தையிட்டி விகாரை எந்தக் காணியில் அமைக்கப்பட்டுள்ளதோ அந்தக் காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணி வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாட்டில் அமைந்துள்ள எந்த மதத் தலங்களையும் அகற்ற முடியாது. அது மத ரீதியான, இன ரீதியான வன்முறைகளுக்கே வழிவகுக்கும்.

மதத்தலங்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்வதை கட்சிகள் உடனடியாக நிறுத்த வேண்டும். தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்களுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஏற்கெனவே நேரில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அவர்கள் இணக்கமான தீர்வுக்கு வர சம்மதம் தெரிவித்துள்ளார்கள். பலர் மாற்றுக் காணிக்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

இந்நிலையில், காணி உரிமையாளர்களைத் திசை திருப்பி அவர்களைத் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குப் பயன்படுத்தச் சிலர் முற்படுகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## மக்களின்...

வித்துள்ள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்; மீண்டும் இனவாதம், மதவாதம் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை சீன அரசாங்கத்தின் உதவிப்பொருட்களைக் கையளிக்கும் நிகழ்வில் பங்கெடுத்திருந்த அவர், அதன்பின்னர் தையிட்டி விகாரை சம்பந்தமாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதலில் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் கருத்து என்னவென்பதை நாம் பார்க்க வேண்டும். தையிட்டியில் விகாரை கட்டப்படும்போது அதுதொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுக்காதவர்கள் தற்போது அந்தப் பிரச்சினையைப் பூதாகரமாகத் தூக்கிப்பிடிக்கின்றார்கள்.

தையிட்டி விகாரை விடயத்தினை தூக்கிப்பிடிப்பவர்கள் உண்மையிலேயே அந்த விடயத்தினை முன்னெடுக்கின்றார்களா? இல்லை விரைவில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வரவிருப்பதால் அதற்கான துருப்புச்சீட்டாக இதனைப் பயன்படுத்தப் பார்க்கின்றார்களா?

தையிட்டி விகாரை விடயம் இனவாதத்தினை, மதவாதத்தினை தூண்டக்கூடியது. இனவாதத்தினையும், மதவாதத்தினையும் மக்கள் தோற்கடித்திருக்கின்றார்கள். அதுமட்டுமன்றி நாட்டின் அபிவிருத்தி வேகமாக முன்னெடுக்கப்படுகின்றது.

ஆகவே அதுபற்றிக் கதைப்பதற்கு ஒன்றுமில்லை. அந்த வகையில் மதவாதத்தினை இலகுவாகத் தூண்டி அதன்மூலமாக அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளவே பார்க்கின்றனர்கள்.

எவ்வாறாக இருந்தாலும் எமது அரசாங்கத்தின் கீழேயே இந்தப் பிரச்சினைக்கும் தீர்வினை எட்டுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். மக்களுடன் கலந்துரையாடி, மக்கள் பரிந்துரைக்கும் தீர்மானத்துக்குச் செல்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

விகாரை அமைக்கப்பட்டமை சட்ட விரோதமானதா? இல்லையா? என்பது தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட கருத்துக்களை முன்வைக்க முடியும். ஆனால், விகாரை அமைக்கப்பட்டுள்ள நிலமானது மக்களுடையது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதனால் அந்த நிலத்துக்குச் சொந்தக்காரர்களுக்கு மாற்றுக் காணிகளை அல்லது நட்டஈட்டை வழங்க வேண்டிய தேவையுள்ளது.

விகாரையை உடைத்துநொருக்குவதால் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமா? என்பது பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆகவே சுமூகமான தீர்வொன்றினை மேற்கொள்ள வேண்டும். இனவாதம், மதவாதம் தலைதூக்குவதற்கு இடமளிக்கக் கூடாது. அதில்நாம்உறுதியாக இருக்கின்றோம் என்றார். (ம-7)

## வவு...

நேற்று இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வீதியில் பலர் பயணித்துக் கொண்டிருந்தபோது கூட்டமாகப்பறந்து வந்த குளவிகள் அவர்கள் மீது கொட்டியுள்ளன.

இதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 9 பேர் குளவிகளின் தாக்குதலுக்குள்ளாகி வவுனியா பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,250)

## நாடளாவிய...

மணிக்கு இடையில் நாடு முழுவதும் அமுல்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நுரைச்சோலை நிலக்கரி அனல் மின் நிலையம் மீண்டும் தேசிய மின் அமைப்புடன் இணைக்கப்படும் வரை இந்த மின் விநியோகத் துண்டிப்பை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது. (ம-7)

## கொழும்பில்...

இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்றவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பரவும் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக

## தென்னைப் பயிர்ச்செய்கை தலைவரிடம் வடக்கு ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் வேகமாகப் பரவிவரும் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமலை வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல், தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பொதுமுகாமையாளர் விஜயசிங்க ஆகியோர் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரை, ஆளுநர் செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

பொருத்தமான தருணத்தில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் தலைவரது வருகை அமைந்துள்ளதாகக் குறிப்பிட்ட ஆளுநர், வடக்கில் மிக மோசமான பாதிப்பை வெள்ளை ஈ ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு வெள்ளை ஈ தாக்கம் மோசமாக இருந்ததாகவும் பின்னர் அது இல்லாமல் போயிருந்ததாகவும் தற்போது மீண்டும் வேகமாகப் பரவி வருவதாகவும் சுட்டிக் காட்டிய ஆளுநர் அதனை வேகமாகக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தென்னை பயிர்ச் செய்கை சபையின் தலைவர், தென்னை பயிர்ச்செய்கை பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுவதாகவும் தற்போது வெள்ளை ஈ தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டதுடன், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலும் விவரித்தார்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் தென்னை முக்கோண வலயத்தை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் இந்த ஆண்டு ஒரு மில்லியன் தென்னங்கன்றுகளை 16,000 ஏக்கரில் நடுகை செய்வதற்கு திட்டமிடுவதாகவும் அதற்குரிய ஒத்துழைப்புக்களை ஆளுநரிடம் கோரினார்.

புதிய தென்னங்கன்றுகளை நடுகை செய்வதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர், சில இடங்களில் வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களத்தால் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால் சிக்கல் நிலைமை இருக்கின்றது எனவும் தெளிவுபடுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் தென்னை பயிர்ச்செய்கைக்கு உரங்கள் பயன்படுத்துவது குறைவு எனக் குறிப்பிட்ட வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், இங்கு தென்னை ஆராய்ச்சிச் சபையின் ஓர் அலகினை நிறுவ வேண்டியது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோல கலப்பு இன தென்னங்கன்றுகளை இங்கு அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அனுமதிக்கப்பட்ட சில வகையான உரங்களைப் பயன்படுத்துவதன் ஊடாகவே தென்னை மரங்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெறுவதுடன் கூடியளவான உற்பத்தியையும் பெற்றுக் கொள்ள முடியும் என தென்னை பயிர்ச்செய்கை சபையின் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன் உரங்களை மானிய விலையில் வழங்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தென்னை பயிர்ச்செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் தே.வைகுந்தன், வெள்ளை ஈ தாக்கத்தை பொறிமுறை ரீதியாகக் கட்டுப்படுத்துவதற்கான உபகரணங்கள் தென்னைப் பயிர்ச்செய்கை வசம் உள்ள போதும், ஆளணி பற்றாக்குறை காணப்படுவதாகத் தெரிவித்தார்.

பாதுகாப்புத் தரப்பினரின் உதவிகளைப் பெற்று வழங்கினால் பரவலாக இதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாக வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ஆ.சிறீ, வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன், யாழ்ப்பாண பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி எஸ்.அஞ்சனாதேவி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடந்த 8 ஆம் திகதி வெளியான வலம்புரியின் ஆசிரியர் தலையங்கத்தில் வடக்கில் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த வடக்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தையிட்டியில்...

தையிட்டிப் பகுதியில் உள்ள சுமார் 07 ஏக்கர் காணியை அடாத்தாகக் கையகப்படுத்தி, எவ்வித அனுமதிகளும் இன்றி சட்டவிரோதமாக திஸ்ஸ விகாரை எனும் விகாரை கட்டடப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இருந்த மக்கள் யுத்தம் காரணமாகக் கடந்த 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அங்கிருந்து வெளியேறியிருந்தனர். பின்னர் அப்பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாக இராணுத்தினர் பிரகடனப்படுத்தியிருந்தனர். பின்னர் யுத்தம் நிறைவடைந்த நிலையில் மக்கள் மீள்குடியேற இராணுவத்தினர் கட்டம் கட்டமாக அனுமதித்தனர். அவ்வேளை தற்போது விகாரை அமைந்துள்ள மற்றும் அதனைச் சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியில் மக்கள் மீள் குடியேற இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணிகளான 14 ஏக்கர் காணியையும் காணி உரிமையாளர்களிடம் மீளகையளிக்க வேண்டும் என காணி உரிமையாளர்கள் சுமார் ஒரு வருட காலத்திற்கு மேலாக போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் நாளை புதன்கிழமை ஆகிய இரு நாட்களும் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அதற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணி உரிமையாளர்களின் கோரிக்கையை அடுத்து , பல்வேறு தரப்பினரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதே வேளை குறித்த விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள சுமார் 14 ஏக்கர் காணியும் விகாரைக்கு வழங்க வேண்டும் எனவும், அதில் யாத்திரிகர்கள் தங்குமிடம், மடாலயங்கள், பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளதாக அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் என்ற அமைப்பு யாழ். மாவட்ட செயலரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

குறித்த அமைப்பின் தலைவர் தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் எனவும், பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றி இருந்தவர் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


**மணமகள் தேவை**

1979 ம் ஆண்டு, யாழ். இந்து கௌரவ குடும்பம், அவுஸ்திரேலியா Citizen, Civil engineer, குறுகிய காலத்தில் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு :
071 828 5673
(3382)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (3380)
076 825 7716 (ஆகாஸ்)

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2242)

**விற்பனைக்கு**

8 KV யூரோபவர் (Euro power) ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. (உற்பத்தி பெல்ஜியம்)
தொடர்புகளுக்கு :
077 623 7416
(3390)

**வகுப்புக்கள்**

யாழ். நகரில்
தரம் 6 – G.C.E(O/L) வரை
விஞ்ஞானம்
தனி/ குழு வகுப்புக்கள்
075 070 3100
(3341)

**மொத்தக் கொள்வனவுகள்**

மொத்தக் கொள்வனவு, டெலிவரிகள் வடமராட்சி சில்லறை கடைகளிற்கு பொருட்கள் கொள்வனவுகள், இலவச Home டெலிவரிகளினை Happy Supermarket உரும்பிராயினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.
Happy Supermarket - உரும்பிராய்
076 800 6500/ 077 780 8030
(830)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.